டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 21.03.2025 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 226 - Madurai | Online Edition

## தமிழகத்தில் மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, மார்ச் 20

தமிழகத்தில் வருகிற 25ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தென்னிந்திய பகுதிகளின் மேல் வளி மண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 22 மற்றும் 23ம் தேதிகளில் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## உலக நீர் தினம் 2025-பனிப்பாறை பாதுகாப்பு-போட்டி

# பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்கலாம்

கோயம்புத்தூர், மார்ச் 20

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 2025 ஆம் ஆண்டுக்கான உலக நீர் தினத்தினை பிரமாண்டமாகவும் அறிவியல் ரீதியாகவும் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது. 1 முதல் 9 ஆம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்களுக்கு, கால நிலை மாற்றம் மற்றும் உலகளாவிய நீர் நெருக்கடியை எதிர்த்துப் போராடுவதில் பனிப்பாறை பாதுகாப்பிற்கு முன் உரிமை அளிப்பதற்கான கூட்டு முயற்சிகளை ஊக்குவிப்ப தற்காகவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும், வரைதல், சொற் பொழிவு, கட்டுரை எழுதுதல் மற்றும் மாதிரி கண்காட்சி போன்ற நீர் கருப்பொருள் கொண்ட மாவட்ட அளவிலான நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

கூடுதலாக, பனிப்பாறை உருகுதல், சுற்றுச்சூழல் அமைப்பு, அச்சுறுத்தல்கள், காலநிலை மாற்றம், அறிவியல் தரவு மற்றும் மாதிரிகள் போன்ற அம்சங்களைக் காண்பிக்கும் பனிப்பாறை பாதுகாப்பு குறித்த ஒரு மெகா மாதிரி, விழிப்புணர்வைப் பரப்பவும், நீர் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும் வளாகத்தில் காட்சிப்படுத்தப்படும்.

கோவையில் உள்ள வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் 22.03.25 (சனிக்கிழமை) காலை 9.00 மணிக்குள் உலக நீர் தினம் 2025 போட்டிகளில் பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்கலாம். இந்த நிகழ்வை வெற்றி கரமாக்குவதற்கு உங்கள் உற்சாகமான பங்கேற்பையும் ஆதரவையும் எதிர்நோக்குகிறோம்.

மேலும் விபரங்களுக்கு முனைவர் எஸ்.கே.ராஜ்கிசோர், உதவிப் பேராசிரியர் (ENS) : 95002 12743, முனைவர் ராமச்சந்திரன், கற்பித்தல் உதவியாளர் (SWCE) : 90439 83337 தொடர்பு கொள்ளலாம்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# சுழற்சாவி தொழிலாளர் பயிற்சி நிறைவு

கோயம்புத்தூர், மார்ச் 20

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறை, புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைச்சகத்தின் நிதியுதவி பெற்று செயல்படும் சாண எரிவாயு மற்றும் பயிற்சி மையத்தின் (BDTC) மூலம் பல்வேறு மாவட்டத்திலிருந்து வருகை புரிந்திருந்தவர்களுக்கு சுழற்சாவி தொழிலாளர் பயிற்சி 05.03.25 அன்று தொடங்கப்பட்டு 19.03.25 வரை பதினைந்து நாட்களுக்கு நடத்தப்பட்டது.








தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுமார் இருபது பயனாளர்கள் கலந்து கொண்டனர். முனைவர் வெ.பழனி செல்வம் வரவேற்புரை அளித்தார். புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறையின் தலைவர் மற்றும் சாண எரிவாயு மேம்பாடு மற்றும் பயிற்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் தே.ரமேஷ் பயிற்சியின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக கூறி பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். முனைவர் பொ.விஜயகுமாரி இணை பேராசிரியை நன்றியுரையாற்றினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு:
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தானியங்கி சூரிய விளக்கு பொறி : விவசாயிகளுக்கு வேளாண் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்



சேலம், மார்ச் 20

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் சிறுவாச்சூர் கிராம விவசாயிகளுக்கு நெல் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து பயிற்சி வழங்கினர். இந்த பயிற்சிக்கு தலைவாசல் வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் ஜானகி நெல் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி வேப்பன்கொட்டை கரைசல் தாயரிப்பது குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தார். உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் மானிய திட்டங்கள் பற்றி விவரித்தார்.




இந்த பயிற்சியில் MIT வேளாண் தொழில்நுட்ப கல்லூரி வேளாண் இறுதியாண்டு மாணவிகள் க.கீதப்பிரியா, பா.ஞனா ஸ்ருதி, சு.கோபிகா, பெ.கௌசல்யா, சி.ஹரிணி, ரா.அ.ஹரிணி பிரியா, ஸ்ரீ.இனியா, அ.ஜாய்சிலாவண்யா, ஜோ.ஜோஸ்பின் ஜெஃப்ரினா ஆகியோர் கிராம புற வேளாண் அனுபவ பயிற்சியின் கீழ் பங்கேற்று தானியங்கி சூரிய விளக்கு பொறி குறித்து விவரித்துடன் எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்து செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தார். இலை வண்ண அட்டையை பயன்படுத்தி உரம் இடுதல் குறித்தும் செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். மேலும் உயிரியல் முறைகள் குறித்து விளம்பர பலகை மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த பயிற்சி வகுப்பில் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 20.03.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 14 | 18 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 14 | 28 | 57 | உருளை (பிற) | 20 | 30 |
| 1B | கத்திரி(Nadu) | 20 | 26 | 57A | உருளை(ஊட்டி) | 40 | 52 |
| 2 | வெண்டை | 34 | 40 | 58 | மேரக்காய் | 18 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 10 | 12 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 25 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 10 | 13 | 60 | கேரட் | 32 | 40 |
| 5 | அவரை(பீன்ஸ்கட்) | 44 | 48 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 30 | 40 |
| 6 | புடலை | 40 | 44 | 62 | நூல்கோல் | 20 | 24 |
| 7 | பீர்க்கன் | 34 | 38 | 63 | டர்னிப் | 30 | 35 |
| 8 | சுரைக்காய் | 14 | 18 | 64 | மு.கோஸ் | 14 | 18 |
| 9 | பாகற்காய் | 28 | 32 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 30 | 34 | 66 | காலிபிளவர் | 28 | 33 |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 70 | 76 |
| 12 | அரசாணி | 10 | 14 | 68 | பூண்டு | 80 | 100 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 18 | 22 | 69 | இஞ்சி | 40 | 50 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 20 | 25 | 70 | புருக்கோலின் | 90 | 100 |
| 15 | சி.வெங்காயம் | 25 | 30 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 65 |
| 16 | பெ.வெங்காயம் | 22 | 26 | 72 | குடமிளகாய் | 40 | 46 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 26 | 73 | பட்டர் பீன்ஸ் | 100 | 110 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 54 | | | | |
| 19 | முருங்கை | 30 | 35 | | | | |
| 20 | தேங்காய் | 58 | 62 | | | | |
| 21 | மாங்காய் | 45 | 65 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 50 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 58 | 62 | 75 | எலுமிச்சை | 60 | 70 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 30 | 38 | 78 | பப்பாளி | 35 | 42 |
| 28 | கறிவேப்பிலை | 60 | 65 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 120 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காஷ்மீர்) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 80 | 100 |
| 33 | சுக்கிட்டிக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 58 |
| 35 | சிறுகீரை/பாலாக்கு | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 24 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 18 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 60 | 70 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 40 | 45 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 58 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 40 | 45 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 16 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 22 | 26 | 96 | நேந்திரன் | 60 | 64 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 15 | 20 | 97 | செவ்வாழை | 80 | 90 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காலிபிளவர் (உள்ளூர்) | 16 | 20 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 60 | 68 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 28 | 102 | நெல்லிக்காய் | 60 | 70 |
| 52 | புளி | 0 | 0 | 103 | Seedless திராட்சை(பக) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கார்ன் | 32 | 36 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 32 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 20 | 24 | | | | |

# எண்ணெய் வித்துப் பயிர்களில் அதிக மகசூல் பெற மேம்படுத்தப்பட்ட உத்திகள் பற்றிய ஒரு நாள் நிலைய பயிற்சி

திருச்சி, மார்ச் 20

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, எண்ணெய்வித்துப் பயிர்களில் மகசூல் அதிகரிக்க மேம்படுத்தப்பட்ட உத்திகள் பற்றிய ஒரு நாள் நிலைய பயிற்சி 24.03.25 (திங்கள்கிழமை) அன்று காலை 10 மணி முதல் நடத்தப்பட உள்ளது.




இப்பயிற்சியில் எண்ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி போன்ற பயிர்களில் அதிக மகசூல் தரும் நவீன இரகங்கள், விதை நேர்த்தி, நிலக்கடலையில் பொக்கு கடலையை குறைத்து மகசூலை அதிகரிக்க உதவும் நிலக்கடலை ரிச் பூஸ்டர் மற்றும் ஆமணக்கில் அதிக மகசூல் பெற ஆமணக்கு கோல்டு பூஸ்டர் பயன்பாடுமற்றும் முக்கியத்துவம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, விதை உற்பத்தி மற்றும் அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள் குறித்து தெளிவாக விவரிக்கப்பட உள்ளது.

ஆர்வமுள்ள விவசாயிகள், 22.03.25 அன்று மாலை 5 மணிக்குள் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யவும்.

தொடர்புக்கு : 04312 962854, 90805 40412, 91717 17832 என்ற எண்ணை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யவும்.

மேற்கண்ட தகவல்களை நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மரபணு – உதவி இனப்பெருக்கம் குறித்த சர்வதேச பயிற்சிப் பட்டறை

கோயம்புத்தூர், மார்ச் 20

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரிதொழில்நுட்ப மையமும் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையும் (DST) இணைந்து, சர்வதேச பயிற்சிப் பட்டறையை நடத்தினர். பயிர் மேம்பாட்டிற்கான மரபணு ஆய்வுகளில் முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்க முன்னணி நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.



தொடக்க அமர்வில் தாவர உயிரி தொழில்நுட்பத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் இ.கோகிலாதேவி வரவேற்புரை வழங்கினார். தொடக்க உரையை தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின்இயக்குனர் முனைவர் ந.செந்தில் வழங்கினார். அதைத் தொடர்ந்து தாவர இனப்பெருக்கம் மற்றும்மரபியல் மையத்தின் இயக்குனர் முனைவர் ரா.ரவிகேசவன் சிறப்புரையாற்றினார். பயிர் இனப் பெருக்கவியலில் எதிர்கால முன்னெடுப்புகள் குறித்து அவர் விரிவாக விவரித்தார். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவலியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எல்.அருள் நன்றியுரையாற்றினார்.

தொழில்நுட்ப அமர்வுகளில் கனடாவின் வேளாண்மை மற்றும் வேளாண் உணவு ஆராய்ச்சி விஞ்ஞானி டாக்டர் ராஜாரகுபதி, பயிர் மேம்பாட்டில் மரபணு தேர்வு என்ற தலைப்பில் பேசினார்.

CGIAR–இன் உலகலாவிய பகிர்வு ஆய்வக சேவை தலைவர் முனைவர் ராஜகுருபோகர் நவீன விவசாயத்தில் மூலக்கூறு இனப்பெருக்கத்தின் முக்கியத்துவத்தையும் வேளாண் முன்னேற்றத்தில் மரபணு வரிசை முறை தொழில்நுட்பத்தின் பங்கு குறித்து சொற்பொழிவு ஆற்றினார்.

இப்பயிற்சிப் பட்டறையில் மேம்பட்ட மரபணு நுட்பங்களை மையமாகக் கொண்ட அமர்வுகளும் இடம் பெற்றன. தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் முனைவர் வீரரஞ்சனியும், விஞ்ஞானி டாக்டர் ராஜாரகுபதி மரபணு – உதவி இனப்பெருக்கத்தில் ஹாப்லோடைப் மற்றும் மரபணு தேர்வு குறித்து மாணவர்களுக்கு பயிற்சியளித்தனர்.

இறுதியாக, உலகளாவிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் மரபணு–உதவி இனப்பெருக்கத்தின் எதிர்காலத்தை வலியுறுத்தி, அமெரிக்காவின் டெக்சாஸ் A&M AgriLife ஆராய்ச்சியின் உதவிப் பேராசிரியர் முனைவர் முருகார்த்திக் ஜெயக்கொடி உரையாற்றினார். நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்வுடன் பயிற்சி பட்டறை நிறைவடைந்தது. இதில்சுமார் 40க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.




## தென்னையில் நோய்களை கட்டுப்படுத்தும் முறை செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



விருதுநகர், மார்ச் 20

விருதுநகர் மாவட்டம், அருப்புக் கோட்டை அருகே உள்ள கல்லூரணி கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு நம்மாழ்வார் வேளாண்மை கல்லூரியில் பயிலும் மாணவியர்கள் தென்னை மரத்தில் உள்ள நோய் மற்றும் அதனை கட்டுப்படுத்தும் முறையை செயல்முறை விளக்கமாக பயிற்சி அளித்தனர்.

# நெல் பயிர் விவசாயிகளுக்கு வயல் தின விழா




திருச்சி, மார்ச் 20 நெல் பயிர் விவசாயிகளுக்கு வயல் தின விழாவானது மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி சார்பில் நடத்தப்பட்டது. இதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவையாறு வட்டம், அம்மையகரம் கிராமத்தில் நெல் பயிருக்கு தமிழக அரசு விவசாய துறை உதவியுடன் நடத்தப்பட்டது. இதில் அம்மைய கரம் கிராமத்தை சேர்ந்த 35 முன்னோடி விவசாயிகள் பங்கு பெற்றனர்.




முன்னதாக இந்த கிராமத்தில் வயல் வெளிப்பள்ளியானது ஐந்து வாரங்கள் நடத்தப்பட்டது. இதில் நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் கற்றுக்கொடுக்கப்பட்டது. இதில் மண் பரிசோதனை, விதை நேர்த்தி, பூச்சி நோய் மேலாண்மை, வயல் சூழல் ஆய்வு, நன்மை தீமை பூச்சிகள், இயற்கை பூச்சி மற்றும் பூஞ்சண விரட்டிகள், பஞ்சாகாவ்யா, தசகாவ்யா, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், பூச்சி ஒழிப்பில் பொறிகளின் பங்கு போன்ற முக்கிய தொழில் நுட்பங்கள் விரிவாக செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து இப்பள்ளியின் இறுதி நிகழ்வாக வயல் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழா மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் கோவிந்தராஜ், தலைமை உரையாற்றினார். தொழில் நுட்ப அலுவலர்கள் அமுதா, ஜெயகாந்தன் சிறப்புரையாற்றினர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# டிரோன் பைலட் பயிற்சி பற்றிய தகவல்கள்



டிரோன் தொழில்நுட்பம் சினிமா ஷூட்டிங்கில் தொடங்கி, திருமண வீடு வரை வந்து இன்றைய தினத்தில் விவசாய பணிகள் எல்லாவற்றிலும் சுழன்று பறக்கிறது. இன்றைய கால கட்டத்தில் பட்டி தொட்டிகளில் பறக்க ஆரம்பித்து விட்டது இந்த டிரோன். அதை முறைபடி இயக்கிடவும் லைசென்ஸ் வாங்கிடும் முறைகளையும் இந்த பதிவில் காண்போம்.

**யாரெல்லாம் டிரோன் பைலட் பயிற்சி பெறலாம்?**

18 வயது பூர்த்தி செய்யப்பட்ட இளைஞர்கள், மகளிர் தொடங்கி 60 வயதுக்குட்பட்டவர்கள் வரை விருப்பமும் டிரோன் இயக்க ஆர்வமுள்ள அனைவரும் பயிற்சி பெறலாம்.

**கல்வி தகுதி என்ன?**

குறைந்த பட்சமாக 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருந்தாலே போதும். இது மிகவும் எளிதான பயிற்சி 5 முதல் 7 நாட்கள் வரையிலான பயிற்சியிலே டிரோன்கள் இயக்க முடியும். முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டுமானால் 15 நாட்கள் வரை ஒரு சிலருக்கு தேவைப்படலாம்.

**டிரோன் வகை என்ன என்ன தெரியுமா?**

1) நானோ டிரோன் (அதிக பட்சமாக 250 கிராம் எடை)

2) மைக்ரோ டிரோன் (250 கிராம் முதல் 2 கிலோ வரை)

3) சிறியது (2 கிலோ தொடங்கி 25 கிலோ எடையை தாங்க கூடியது)

4) நடுத்தரம் (25 கிலோ முதல் 150 கிலோ வரை எடையை தாங்க கூடியது)

5) பெரியது (150 கிலோவுக்கு மேல்) போன்ற டிரோன்கள் உள்ளன.

விவசாய சம்மந்தப்பட்ட பணிகளுக்கு பயன்படுத்த டிரோன் பயிற்சி கோவை வேளாண்மை பல்கலைக்கழக கல்லூரியில் பயிற்சி வழங்கப்படுகிறது.

**டிரோன் பயிற்சியில் என்னென்ன கற்றுக் கொடுக்கப்படும்?**

டிரோன்கள் பற்றிய அறிமுகம், அதனுடைய செயல்பாடுகள் இயக்கவியல் தத்துவம், இயக்கும் வழிமுறைகள் உரம், பூச்சிகொல்லி மருந்து தெளிப்பது குறித்த பயிற்சி செயல் முறையாக வழங்கப்படும்.

**டிரோன்களை எந்த எந்த விவசாய பயிற்சிக்கு பயன் படுத்தலாம்?**

நீர் தெளிப்பது, பூச்சி மருந்து தெளிப்பது, விதைகளை தூவுவது, திடமான உரப் பொருட்களை தூவுவது, திட திரவ பூச்சிக் கொல்லிகளை தெளிக்கவும் பயன்படுத்தபடுகிறது. 1 நாளில் முழுக்க முழுக்க செய்கின்ற வேலையை 30 நிமிடங் களில் செய்து முடிக்கிறது இந்த டிரோன்கள். விவசாய பணிகளை மேற்கொள்ள வேண்டுமானால், சிவில் ஏவியேசன் அமைச்சத்தின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுநர்களிட மிருந்து, பயிற்சி நிறுவனங்களிடமிருந்து பயிற்சி பெற்றால் தான் அது முறையான பைலட் உரிமமாக அங்கீகரிக்கப்படும். மத்திய அரசின் மானியம் இல்லாத பட்சத்தில் அதிகமாக பட்சமாக ரூ.40 ஆயிரத்தில் டிரோன் பயிற்சி பெறலாம்.

**வேலை வாய்ப்பு இருக்குமா?**

டிரோன் பயிற்சி பெற்றவர்களுக்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன. இப்போது டிரோன் மூலமாக மருந்து தெளிக்க 500 வரை ஒரு ஏக்கருக்கு வாடகையாக வசூலிக்கப்படுகிறது.

இன்றைய படித்த விவசாயத்தில் ஆர்வமாக உள்ள இளை-ஞர்கள் இந்த பயிற்சியை பெற்றால் தங்களுடைய நிலங் களுக்கு பயன்படுத்துவதுடன் வாடகைக்கு டிரோன்களை விட்டு அதிக வருமானம் பெறலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# வாழை மற்றும் தென்னை விவசாயிகளுடன் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



தஞ்சாவூர், மார்ச் 20

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் வட்டம், வெட்டிக்காடு கிராமத்தில் வாழை மற்றும் தென்னை விவசாயிகளுடன் திருச்சியில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைகழகத்தின் வேளாண் கல்லூரி புல முதல்வர் Dr.K.சோழன் மற்றும் உதவி பேராசிரியர் Dr.D.கோகுலின் அறிவுறைப்படி குழு மாணவர்கள், செய்த செயல்விளக்கத்தில் வாழைக்கு ஏற்படும் கூன்வண்டு பாதிப்பு, தளர்வு மற்றும் முடக்குதல், வாழையில் பழ உறை, வாழைப்பழ காப்ஸ்யூல் பயன்பாடு போன்ற செய்முறைகள் மற்றும் தென்னையில் தேங்காய் வேர் உணவளித்தல், தென்னையில் ஏற்படும் பூச்சி கட்டுப்பாடு முறைகளை செயல்படுத்தி காட்டினர். மேலும் இரண்டு பயிருக்கு உடைய மேலாண்மையும், அதிக விளைச்சல் தரக்கூடிய ரகங்கள் மற்றும் அதன் சாகுபடி நுட்பங்கள் என்னவென்று எடுத்து கூறினர். மாணவர்களுடன் வெட்டிக்காடு விவசாயிகள் கலந்து உரையாடி புதிய மேலாண்மை முறைகளை தெரிந்து கொண்டனர்.

# கரும்பூஞ்சான நோய் மேலாண்மை பற்றி விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



விருதுநகர், மார்ச் 20

விருதுநகர் மாவட்டம், கோவிலாங்குளம் கிராமத்தில் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவிகள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி மூலம் விவசாயிகளுக்கு தென்னை மற்றும் இதர செடிகளை தாக்கும் கரும்பூஞ்சான் நோய் மேலாண்மை பற்றிய விளக்கம் மற்றும் மாதிரி செயல்முறை மேற்கொண்டனர். தென்னையில் கருப்பு பூஞ்சை நோய், முக்கியமாக வெள்ளை ஈக்கள் (Rookos) மூலம் பரவுகிறது. வெள்ளை ஈக்கள் தென்னை இலையின் அடிப் பகுதியில் கூடுகட்டி சத்துக்களை உறிஞ்சுகின்றன. இதனால் அவை வெளியேற்றும் தேன் போன்ற திரவம் இலையின் மேல் பரவி கருப்பு பூஞ்சை வளர வழிவகுக்கிறது. இந்த கருப்பு பூஞ்சையை கட்டுப்படுத்த மைதா மாவு கரைசல் உதவுகிறது.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# FPO கள பணியாளர்களுக்கு கோடை உழவின் அவசியம் குறித்த பயிற்சி



விருதுநகர், மார்ச் 20

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்திலுள்ள சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பாக உள்ள அக்ரி கிளினிக்-யின் ஆலோசகர் சந்திர சேகரன் கோடை உழவு போடுவதன் அவசியம் குறித்து கள பணியாளர்களுக்கு நேற்றைய தினத்தில் FPOவின் செயல் அலுவலர் பார்த்த சாரதி தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பயிற்சியளித்த வேளாண் ஆலோசகர் கூறுகையில், கோடை உழவு என்பது வரும் சாகுபடிக்கான தொடக்கமாக சித்திரை முதல் நாளில் கிராமப்புறங்களில் நாளேரு அல்லது பொன் ஏர் விடுவது நம்முடைய பாரம்பரிய பழக்கமாகும்.

சித்திரை மாதத்து உழவு பத்திரை மாற்று தங்கம் என்பதற் கிணங்க கோடை உழவால் கோடி நன்மைகள் உண்டாகும் என்றார். அந்த காலத்துல ஏழு உழவு போட்டால் எரு போட வேண்டியதில்லை என்ற சொலவடைக்கேற்ப கிராமப்புற மக்கள் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அழுது கொண்டே இருந் தாலும் கூட உழுது கொண்டு இருப்பாங்க. ஆனால் இன்று வண்டி மாடுகள் கால்நடைகள் குறைந்து போனதால் டிராக்டர் உழவு போட வேண்டிய நிலை. அப்போது உழவிற்கு அதிகமாக பணம் செலவாகிற காரணத்தால் உழவை குறைத்து கொள் கின்றனர். இது தவறான அணுகுமுறை. வள்ளுவர் கூட தனது திருக்குறளில் ஒரு விசை மண்ணை கால் விசையாக மாற்றிட உழவு அவசியம் என்கிறார்.

பயிரில்லா இக்கால கட்டத்தில் வயலை / நிலத்தை உழுவதன் மூலமாக மண்ணின் வளம் காக்கப்படுவதுடன் மண் அரிமானம் (SOIL EROSION) தடுக்கப்படுகிறது. மண்ணின் ஈரப்பதம் காக்கப் படும். தரிசாக இருந்தால் பெய்கின்ற மழை நீர் அந்த நிலத்தை விட்டு ஓடிவிடும். உழவு போடுவதால் அந்த உழவு சால் வழியாக ஓடி நிலத்தில் சேகரிக்கப்படும் (WATER HOLDING CAPACITY)

அதிகமாக பின்னால் விதைக்கின்ற பயிரை காப்பாற்ற உதவும். அதனால் மண்ணின் சத்துகள் நிலத்திலே தங்கும்.

அழமாக உழவதன் மூலமாக மண்ணின் மேலோட்ட அடுக்கின் இறுக்கம் குறைவதுடன் மண்ணில் உள்ள கூண்டுபுழுக்கள், பூச்சிகளின் முட்டைகள் மேலே கொணர்ந்து சூரிய வெப்பத்தால் அழிக்கப்படும். அதுமட்டுமல்லாது களைச்செடிகள் அடியோடு அகற்றிட இந்த உழவு அவசியமாகும். எனவே விவசாயிகள் ஏற்கனவே கூறியபடி தாங்களுடைய நிலத்தின் மண்வளத்தை அறிய மண்மாதிரி எடுப்பதற்கான முயற்சியுடன் அடுத்து கோடை உழவிற்கான ஏற்பாடுகளை செய்ய தயாராக இருக்க வேண்டும் என்றார்.

எனவே வருகிற 25-26 ஆம் ஆண்டில் தமிழக அரசு 3 லட்சம் ஏக்கரில் கோடை உழவு செய்திட, எக்டருக்கு 2000 ரூபாய் மானியமாக வழங்கிட அறிவித்துள்ளது. மேலும் உழவிற்கான டிராக்டர்கள் தமிழக வேளாண் பொறியியல் துறை மூலமாக குறைந்த வாடகையில் உழவன் செயலி (APP) மூலமாக முன்பதிவு செய்திட வேண்டுமென கூறினார்.

செயல் அலுவலர் பார்த்த சாரதி கூறுகையில் நம்முடைய ய்ஊணநு மூலமாக விவசாய விலை பொருட்களை அதனுடைய தரத்தின் அடிப்படையில் விலை நிர்ணயிக்கபடுவதாக கூறினார். நல்ல திரட்சியான தரமான விளைப் பொருட்களுக்கு வெளி மார்க்கெட்டை விட கூடுதலாக விலை தரப்படுவதாக தெரிவித் குதார். பயிற்சியில் நரிக்குடி FPO சி.இ.ஓ அசோக்குமார் களபணியாளர்கள் வெற்றி செல்வி பரதன் பிரியா மாரீஸ்வரி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தற்போது நிலக்கடலை பருப்பை முளைக்கும் திறனை அறிய விருதுநகரில் உள்ள விதை பரிசோதனை ஆய்வகத்திற்கு (SERVICE SAMPLE) அனுப்பப்பட்டுள்ளது.

முளைத்திறன் அறிக்கை வந்தவுடன் விதை பருப்பு அக்ரி கிளினிக் வாயிலாக விற்பனை செய்யவும் தேவையான உரங்கள் பூச்சி மருந்துகள் இருப்பில் உள்ளதாக தெரிவித்தார்.

மேலும் இந்த FP0வின் செயல்பாடுகள் சிசிடியின் நிர்வாக இயக்குநர் பத்மாவதி, திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோவின் வழிகாட்டுதலின் பேரில் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுரை வேளாண் அறிவியல் மையத்தில் 16வது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடந்தது



மதுரை, மார்ச் 20

மதுரை ஒத்தக்கடை வேளாண்மைக் கல்லூரியில் அமைந்து உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 16வது அறிவியல் ஆலோசனைக் கூட்டம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. முனைவர் பி.பொ.முருகன், விரிவாக்கக் கல்வி இயக்குநர், தவேபக, கோவை தலைமையேற்று நடத்தினார். முனைவர் இ.சுப்பரமணியன், திட்ட ஒருங்கிணைப்பாளர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் சமுதாய அறிவியல் கல்லூரி முதல்வர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ப.சுப்புராஜ் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்த அறிவியல் ஆலோசனைக் கூட்டத்தில் புதிய 6 உறுப்பினர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். மதுரை மாவட்டம் சார்ந்த பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்று தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர். கூட்டம் சிறப்பாக நடத்தப்பட்டதற்கு முனைவர் லூ.நிர்மலா நன்றிகளைத் தெரிவித்தார்.

வேளாண்மை மற்றும் வணிகம் சார்ந்த கருத்துக் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. மேலும் விவசாய இடுபொருட்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. திருநங்கைகளுக்கும் இடு பொருட்கள் (ஆட்டுக்குட்டி) வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நான்கு திருநங்கைகள் கலந்து கொண்டனர். மண்புழு உரப் பைகள், சூரியவெப்ப உலர்த்திகள், தேன் பிரித்தெடுக்கும் டிரம், ஆடுகள் மற்றும் விதைகள் என பல விவசாயம் சார்ந்த இடு பொருட்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

கோவை விரிவாக்கக் கல்வி இயக்குநர், விவசாய வர்த்தக இயக்குநர், இயற்கைப் பண்ணைய முறைகள், அவற்றை விற்பனை செய்யும் சங்கிலித் தொடர்கள் ஆகியவற்றை எடுத்துரைத்தனர். குழு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைப் பதிவு செய்தனர். மண் பரிசோதனை மற்றும் மண் வளத்தைப் பாதுகாத்தல் குறித்து மதுரை வேளாண்மைக் கல்லூரி முதல்வர் எடுத்துரைத்தார்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் தொழில்முனைவோர்கள் சந்திப்பு




தேனி, மார்ச் 20

தேனி மாவட்டம், காமாட்சி புரம், சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் தொழில்முனைவோர்கள் சந்திப்பு நடைபெற்றது. மையத்தின் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்யாசிவசெல்வி வரவேற்புரை யாற்றி மையத்தின் திட்டங்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் சந்திப்புக் கூட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் பற்றி எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்டெக்ட் நிறுவனத்தின் இணை இயக்குனர் மருத்துவர் ப.சிவராம் தலைமையுரையாற்றினார். தேனி மாவட்ட தாட்கோ மேலாளர் க.சரளா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தாட்கோ திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

சென்னையிலுள்ள ஸ்நாக்ஸ் எக்ஸ்பட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் முதன்மை செயல் அதிகாரி ப.அருள் முருகன், உணவுப் பொருட்களுக்கு விலை நிர்ணயிக்கும் உத்திகள் பற்றி விளக்கமளித்தார். சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் மண்ணியல் தொழில்நுட்ப வல்லுநர் எம்.அருண் ராஜ், மண்ணியல் தொழில்நுட்பங்கள் மற்றும் அதன் முக்கியத்து வங்கள் மற்றும் மண்புழு தயாரித்தல் குறித்து எடுத்துரைத்தார்.

வேளாண் அறிவியல் மையத்தின் மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தொழில்முனைவோர்களின் சிறுதானியப் பொருட்கள், வாழைப்பொருட்கள், திராட்சைப் பொருட்கள், உடனடி ஊட்டச் சத்துக் கலவைகள், மூலிகைப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. நிறைவில் மையத்தின் வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் சி.சபரிநாதன் நன்றியுரையாற்றினார்.

# கிராமப்புற வேளாண்மை பயிற்சி திட்ட துவக்கவிழா



சிவகங்கை, மார்ச் 20

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவர்கள் (2021 பேட்ச்) கிராமப்புற வேளாண்மை பயிற்சி திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டத்தில் 5 கிராமங்கள் தத்தெடுக்கப் பட்டு பயிற்சி திட்டத்தில் மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.




05.03.25 அன்று இந்த பயிற்சி தொடங்கப்பட்டது. சுமார் 2 மாதங்களுக்கு மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெற உள்ளனர். முன்னதாக இத்திட்டத்தை முதன்மை அலுவலர் டாக்டர் ஆர்.பாபு துவக்கி வைத்து மாணவர்களுக்கு திட்டத்தை பற்றி விரிவாக விளக்கினார். திட்டத்தின் பாட ஆசிரியர் டாக்டர் பா.சுதாகர், உதவி பேராசிரியர், வேளாண் விரிவாக்கத்துறை திட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை விவரித்தனர். திட்டத்தை வழிநடத்த வேளாண்மைக் கல்லூரி மற்றும் மானாவாரி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் ஒரு வட்டத்திற்கு இருவர் என நியமிக்கப்பட்டு அவரவர் துறையில் தொழில்நுட்பத்தை மாணவர்களுக்கு பயல்வித்து, அவற்றை கிராமப்புற விவசாயிகளின் பயிர் நிலங்களில் பயன்படுத்த அறிவுறுத்தபட்டனர். இத்திட்டத்தை செயல்படுத்த வேளாண் இணை இயக்குனர் (சிவகங்கை மாவட்டம்). வேளாண் உதவி இயக்குனர்கள், வேளாண் அதிகாரிகள், துணை வேளாண் அதிகாரிகள் மற்றும் உதவி வேளாண் அதிகாரிகள் உதவி செய்துள்ளனர்.

மேலும், 17.03.25, அன்று வேளாண் மாணவர்கள் சிங்கம் புணரி வட்டம், காளாப்பூர் கிராமத்தில் ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சியின் அறிமுக விழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் சேவகபெருமாள், சிவகங்கை, தென்னை உற்பத்தியாளர் கம்பெனியின் தலைவர், பிரவீன், தோட்டக்கலை உதவி இயக்குனர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். டாக்டர் சுதாகர், உதவி பேராசிரியர், (வேளாண் விரிவாக்கத் துறை). டாக்டர், ஜெயராமச்சந்திரன், இணை பேராசிரியர், (இனப் பெருக்கம் மற்றும் மரபியல் துறை) வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் செட்டிநாடு ஆகியோர் பங்கேற்று ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சியின் சிறப்பம்சத்தை விவசாயிகளுக்கு கூறினார்கள்.

சிங்கம்புணரி வட்டத்தில் தங்கி இருக்கும் பத்து மாணவர்கள் மு.பூஜா, பா.பிரவீனா, ஹ.ராஜநிவேதா, கி.ரம்யா கிருஷ்ணன், ந.ரித்திகா, மா.சந்தியா, ச.சரண்யா, ப.சாலினி, ம.சிவானி ஆகியோர்கள் விவசாயிகளிடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, ஊரக வேளாண்மை அனுபவப் பயிற்சி என்றால் என்ன? மற்றும் அதன் நோக்கங்கள் பற்றி எடுத்துரைத்தனர்.



# நெற்பயிரில் அசோஸ்பைரில்லம் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யும் முறை பற்றி விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, மார்ச் 20

மதுரை மாவட்டம், அலங்கா நல்லூர் வட்டாரத்தில் ஊரக வேளாண்மை பணி அனுபவ திட்டத்தில் ஈடுபட்டுள்ள மதுரை வேளாண்மைக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகள் விவசாயிகளின் நிறை குறைகளைக் கண்டறிந்து பயின்று வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் கருவிகளைப் பற்றிய செயல் விளக்கங்கள் அளித்து விழிப்புணர்வை உருவாக்கி வருகின்றனர்.






இவ்வகையில் பெரிய இலந்தைகுளம் கிராமத்தில் மாணவி ரா அ தாரணி நெற்பயிரில் அசோஸ்பைரில்லம் பயன்படுத்தி விதைநேர்த்தி செய்யும் முறை மற்றும் அதன் பயன்கள் பற்றி விளக்கினார். அசோஸ்பைரில்லம் என்னும் நுண்ணுயிர் பயன் படுத்துவதன் மூலம், பயிர்கள் தழைசத்தை உறிஞ்சுவதற்கும், வேர் வளரவும் உதவுகிறது. மேலும் மண் வளத்தை மேம்படுத்துகிறது. இந்த செயல் விளக்க பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# தோட்டக்கலைப் பயிர்களில் நாற்றங்கால் மேலாண்மை குறித்த வெளிமாவட்ட அளவிலான கண்டுணர்வு பயணம்



திருச்சி, மார்ச் 20

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தில் கீழ் 2024-25 ஆம் ஆண்டு வெளிமாவட்ட அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு பயணத்தில் தோட்டக் கலைப் பயிர்களில் நாற்றங்கால் மேலாண்மை என்கின்ற தலைப்பில் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியக்குளம் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்த விவசாயிகள் கண்டணர்வு பயணத்தில் மணப்பாறை பகுதிகளில் உள்ள 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில் மணப்பாறை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மோகனா கொடி அசைத்து துவக்கி வகித்தார்.

தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியக்குளம், கல்லூரி முதல்வர் முனைவர் ராஜாங்கம் விவசாயிகளை வரவேற்றார். பின் கல்லூரியில் மேற்கொள்ளும் ஆராயச்சிகள் புதிய கண்டுபிடிக்கப்பட்ட விதைகள் அதன் தன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். முனைவர் சங்கர், உதவி ஆசிரியர், பழ அறிவியல் துறை, பழங்களில் உள்ள நாற்றங்கால் மேலாண்மை பற்றி கூறினார். பழ பயிர்களில் நாற்றங்கால் முதல் அறுவடை வரை உள்ள தொழில்நுட்பங்கள் பற்றியும் விளக்கி கூறினார். விவசாயிகள் கேள்விகளுக்கும் விரிவாக விளக்கம் கூறினார். முனைவர் சுந்தரையா, இணை பேராசிரியர், காய்கறி அறிவியல் துறை, காய்கறிகளில் உள்ள குழிதட்டு நாற்றங்கால் முறையில் மூலம் நாற்றுகளை உற்பத்தி செய்வதன் மூலம் நாற்றுக்களின் தரத்தை மேம்படுத்துதல் அதிக எண்ணிக் கையில் நாற்றுகளை உற்பத்தி செய்தல் மற்றும் இடவசதி குறைவாக இருக்கும் போது பயிர் செய்வதற்கான வசதி என பல நன்மைகள் பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

குழிதட்டு நாற்றங்கால் முறையில் வேகமான வளர்ச்சி வளர முடிகிறது. இதனால் பயிர் சாகுபடிக்கான காலம் குறைகிறது. குழிதட்டு நாற்றுகளை கையாளுவதும் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதும் எளிது. நோய்த் தடுப்பு முறையில் நாற்றுகள் தனித்தனியாக வைக்கப்படுவதால் நோய்கள் பரவுவதிலிருந்து தடுக்க முடிகிறது. நாற்றுகளை உற்பத்தி செய்வதன் மூலம் மண், உரம் மற்றும் தண்ணீர் போன்ற செலவுகளைக் குறைக்க முடிகிறது போன்ற நன்மை களை விளக்கி கூறினார். விவசாயிகள் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் விரிவாக விளக்கம் கூறினார்.

பட்டறிவு பயணத்தின் இறுதியில் தொழில்நுட்ப விளக்கம் அளித்த அனைத்து பேராசிரியர்களுக்கும் மணப்பாறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கலையரசன் நன்றி கூறினார். இப் பயணத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்திய சீலன் மற்றும் பிரியங்கா செய்திருத்தார்.

# மண்புழு உரம் இடுவதால் ஏற்படும் நன்மைகள் விவசாயிகளுக்கு எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்

திண்டுக்கல், மார்ச் 20



திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டத்தில் உள்ள சில்வார்பட்டி கிராமத்தில் மண்புழு உரம் உற்பத்தி செயல்முறை விளக்கம் தரப்பட்டது. இதனை மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மாணவன் பா.யோகேஷ் ராம் என்பவரால் கிராமப்புற அனுபவத் திட்டத்தின் கீழ் அப்பகுதியில் உள்ள பெண் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மண்புழு உரம் இடுவதால் ஏற்படும் நன்மைகளையும் பயன்களையும் எடுத்துரைத்தார். இச்செயல் முறை விளக்கத்தை அப்பகுதியில் உள்ள பெண் விவசாயிகள் ஆர்வமுடன் பங்கேற்று பயனடைந்தனர்.

# சூரிய மின்சக்தி மற்றும் காலநிலை மாற்றம் விவசாயிகளுக்கான விருதுநகரில் பயிற்சிப் பட்டறை



விருதுநகர், மார்ச் 20

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) கீழ் இயங்கும் மதுரை வேளாண் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி மற்றும் அருப்பு கோட்டை குழு மாணவிகள், கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டம் 2025-ன்கீழ் விருதுநகர் ஆட்சியர் அலுவல கத்தில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண் பொறியியல் துறையினரால் ‘சூரிய மின்சக்தி ஆற்றலும் காலநிலை மாற்றமும்‘ என்ற தலைப்பில் திறன் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

வேளாண் பொறியியல் வல்லுநர்கள் நாகேஷ் மற்றும் ஆல்வின் கிளாரென்ஸ் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு சூரிய ஒளி இயந்திர பயன்பாடு குறித்து விளக்கமளித்தனர். மேலும், சூரிய கூடார உலர்த்தி, சோலார் பம்ப், சூரிய மின்சக்தி வேலிகள் குறித்தும் வல்லுநர்கள் எடுத்துரைத்தனர். இந்த பயிற்சிப் பட்டறையில், விருதுநகரின் மாவட்ட ஆட்சியர் டாக்டர் வி.பி. ஜெயசீலன், மாணவர்களுடன் நேரடியாக உரையாடி, விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி அறிந்து கொண்டார்.

மாணவர்கள் சேகரித்த தகவல்களைக் கொண்டு விவசாயி களின் பிரச்சனைகள் மற்றும் அவற்றின் தீர்வு குறித்து ஆராய்ந்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**